**செய்தி வெளியீடு எண்: 469** **நாள்: 19.07.2018**

## செய்தி வெளியீடு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (19.07.2018), சேலம் மாவட்டம், மேட்டூரில், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிட்ட விழாவில் ஆற்றிய உரை:**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய நல்லாசியோடு, இன்றையதினம், விவசாயப் பெருங்குடி மக்கள் உரிய நேரத்திலே சாகுபடி செய்வதற்காக டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களும், பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களும், தமிழ்நாட்டு மக்களுடைய நீண்டகால பிரச்சினைக்காக போராடினார்கள். அவர்களோடு, விவசாயப் பெருங்குடி மக்களும், பொதுமக்களும் இணைந்து, கிட்டத்தட்ட 48 ஆண்டு காலம் நம்முடைய காவிரி நீரினுடைய உரிமையை பெறுவதற்காக போராடி, இருபெரும் தலைவர்களுடைய நல்லாசியோடு, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய சட்டப் போராட்டத்தின் விளைவாக 48 ஆண்டு காலம் போராடிய தமிழ் மக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் மிகப்பெரிய வெற்றியை அம்மாவினுடைய அரசு பெற்றுத் தந்திருக்கிறது. இது ஒரு வரலாற்றுச் சாதனை. நமக்கு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் 177.25 டி.எம்.சி. ஒவ்வொரு ஆண்டும் கர்நாடக அரசு நமக்கு வழங்க வேண்டுமென்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை அம்மா அவர்களுடைய அரசு பெற்றுத் தந்திருக்கிறது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் கண்ட கனவை, இன்றைக்கு அம்மாவினுடைய அரசு நிறைவேற்றித் தந்திருக்கிறது. விவசாய பெருங்குடி மக்களுக்கு, விவசாயிகளுக்கு உயிராக இருப்பது நீர். அந்த நீரைப் பெறுவதற்காக, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு காலகட்டங்களிலே தன்னையே வருத்திக் கொண்டு, கிட்டத்தட்ட 80 மணி நேரம் மெரினா கடற்கரையில் உண்ணாவிரதம் இருந்து மத்திய அரசின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, சட்டப்போராட்டம் நடத்தி அம்மா அவர்கள் தன்னுடைய இறுதி மூச்சு இருக்கும்வரை தமிழ் நாட்டு மக்களுக்காக உழைத்தவர். அவர் அப்போலோ மருத்துவமனையில் உடல் நலக்குறைவால் சேர்க்கப்பட்ட இரண்டாம் நாள் இந்த காவிரி பிரச்சினை பற்றி பேசினார்கள். அப்பொழுது நான் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தேன். உயர் அதிகாரிகளை எல்லாம் அழைத்து, அடுத்த நாள், மத்திய நீர்வளத்துறை அமைச்சர் உமாபாரதி அவர்கள் தலைமையில், கர்நாடக அரசுக்கும், தமிழ்நாட்டிற்கும், காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும், அதற்கு பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமியை அனுப்புங்கள், தலைமைச் செயலாளரும் செல்லுங்கள், அந்தத் துறையைச் சேர்ந்த செயலாளரும், அந்த அதிகாரிகளும் அவருடன் சென்று நம்முடைய பிரச்சினைகளை எல்லாம் எப்படி எடுத்து வைக்க வேண்டுமென்ற கருத்தை அம்மா அவர்கள் கடிதம் மூலமாக கொடுத்தனுப்பினார்கள். அதுதான், அவர்கள், இறுதியாக, இறப்பதற்கு முன் கொடுக்கப்பட்ட அந்த நிகழ்வு, ஏனென்று சொன்னால், எத்தனையோ அரசியல் கட்சித்தலைவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், உணர்வுப்பூர்வமாக, தன்னுடைய உடல்நிலையைக்கூட பொருட்படுத்தாமல், இறுதிக்கட்டத்தில், காவிரி நீர் தீர்ப்பை பெற்றுத் தரவேண்டுமென்டும் என்பதற்காக போராடிய தலைவி புரட்சித்தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே மனம் உருகி தெரிவித்துக் கொள்கின்றேன். அப்படி போராட்டத்தின் வாயிலாகத்தான் இந்த வெற்றியை பெற்றிருக்கின்றோம். அப்படிப் போராடிய, வரலாற்றுச் சிறப்புமிக்க, இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய

விடாமுயற்சியின் காரணமாக, காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டும் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் நமக்கு கிடைக்க வேண்டிய பங்கு நீரை இந்த இரண்டு அமைப்புகளும் முறைப்படி பெற்றுத்தருவதற்காக உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி மத்திய அரசு இன்றைக்கு அமைத்திருக்கின்றது. காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டும்கூடி, விவாதிக்கப்பட்டு, முதற்கட்டமாக நமக்கு ஜூன் மாதத்திற்கு கர்நாடக அரசு வழங்க வேண்டிய 9.19 டி.எம்.சி. தண்ணீர் வழங்கப்பட்டது. இப்பொழுது ஜூலை மாதம், கர்நாடக அரசால் நமக்கு வழங்க வேண்டிய நீரின் அளவு 31.24 டி.எம்.சி. தண்ணீர். இதை எல்லாம் வல்ல இறைவனுடைய அருளாலும், வர்ணபகவானுடைய கருணையாலும், அவர்கள் விட்டாலும், விடாவிட்டாலும், இன்றைக்கு மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய ஆசியிலே, வர்ணா பகவான் அவர்கள் கருணைகாட்டி, இன்றைக்கு பருவமழை நன்றாக பெய்து மேட்டூர் அணைக்கு இன்றையதினம் 1 லட்சத்து 5 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது. இதே, கடந்த மாதம் நமது அணை வறண்டு கிடந்தது. ஒரே மாதத்தில் எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களுடைய மிகப்பெரிய சக்தியால், ஆசியால் இன்றைக்கு 1 இலட்சம் கனஅடிக்கு மேற்பட்ட தண்ணீர் மேட்டூர் அணைக்கு வந்து, இன்றையதினம் 109 அடி உயர்ந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியும் தெரிவித்துக் கொள்கின்றேன். இன்றையதினம், தொடர்ந்து 1 லட்சம் கனஅடிக்கு மேலாக வந்து கொண்டிருக்கிறது. கிட்டத்தட்ட இன்னும் 3 நாட்களில் 120 அடியை எட்டும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இன்றைக்கு முதன்முதலாக காவிரி மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டையும் அமைத்து, இன்றைக்கு அணை 120 அடியை எட்டக்கூடிய சூழ்நிலையை பார்க்கிறோம். இது வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு நிகழ்வு. இது அம்மா அவர்களுடைய

அரசுக்கு கிடைக்கப்பெற்ற மாபெரும் வெற்றி என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அதேபோல, ஒவ்வொரு மாதமும் கர்நாடகத்திலிருந்து ஆகஸ்டு மாதம் 45.95 டி.எம்.சி, செப்டம்பர் மாதம் 36.76 டி.எம்.சி, அக்டோபர் மாதம் 20.22 டி.எம்.சி, நவம்பர் மாதம் 13.78 டி.எம்.சி, டிசம்பர் மாதம் 7.35 டி.எம்.சி, ஜனவரி மாதம் 2.7 டி.எம்.சி பிப்ரவரி முதல் மே மாதம் வரை 2.50 டி.எம்.சி தண்ணீரும் கர்நாடக அரசு நம்முடைய அணைக்கு வழங்க வேண்டுமென்ற ஒரு நல்ல தீர்ப்பு உச்சநீதிமன்றத்தின் வாயிலாக கிடைத்திருக்கின்றது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒவ்வொரு ஆண்டும் போராடி, போராடி பெறுவதற்கு பதிலாக, catchment பகுதியில், கர்நாடக பகுதியிலே பெய்கின்ற மழையினுடைய அளவினை வைத்து, ஒவ்வொரு மாதமும் நான் குறிப்பிட்ட அளவிற்கு கர்நாடகத்திற்கும், தமிழகத்திற்கும், காவிரி மேலாண்மை ஆணையம், காவிரி நீர் முறைப்படுத்தும் குழு இரண்டும் பேசி, தீர்வு கண்டு, நமக்குத் தேவையான நீரை இன்றைக்கு விடுவிப்பார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தத் தருணத்திலே தெரிவித்து, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.ஏ.செங்கோட்டையன் அவர்களே, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு.பி.தங்கமணி அவர்களே, மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களே, மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் மருத்துவர் எஸ்.சரோஜா அவர்களே, மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.கே.சி.கருப்பணன் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே, இந்தத் தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திரு. செம்மலை அவர்களே, இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று சிறப்பித்துக்

கொண்டிருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்களே, சட்டப்பேரவை உறுப்பினர்கள் திரு.வெங்கடாசலம், திரு.சக்திவேல், திருமதி.மனோன்மணி, திரு.எஸ்.ராஜா, திரு.எஸ்.வெற்றிவேல், திரு.ஆர்.எம்.சின்னதம்பி, திரு.அ.மருதமுத்து, திருமதி.கு.சித்ரா, திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் அவர்களே, பவானிசாகர் சட்டப்பேரவை உறுப்பினர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே மற்றும் வருகை தந்திருக்கின்ற, மேடையில் வீற்றிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களே, நாடளுமன்ற உறுப்பினர்களே, முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, இந்தத் துறையினுடைய செயலாளர் அவர்களே, மற்றும் பொறியாளர்களே, உயர் அதிகாரிகளே மற்றும் கழகத்திலே பல்வேறு பொறுப்புகளை வகித்துக் கொண்டிருக்கின்ற நிர்வாகிகளே, விவசாயப் பெருங்குடி மக்களே, விவசாய சங்கத்தைச் சேர்ந்த தலைவர்களே, நிர்வாகிகளே, பெரியோர்களே, தாய்மார்களே, பத்திரிகையாளர்களே, ஊடக நண்பர்களே, உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் பயன்பெற வேண்டுமென்பதற்காக அம்மாவினுடைய அரசால் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் முன்பருவம், காரிப்பருவம் மற்றும் பின்பருவம் ராபி முதலான சாகுபடி பருவத்தில் பயிரிடும் பயிர்களுக்கு உபயோகித்திட 20 முதல் 25 லட்சம் மெட்ரிக் டன் உரங்கள் இந்த ஆண்டிற்கு பயன்படுத்தப்படவிருக்கிறது. 2018–19–ஆம் நிதியாண்டில், காரிப் மற்றும் ராபிப் பயிர் சாகுபடி தேவைக்காக யூரியா 9.90 லட்சம் மெட்ரிக் டன், டி.ஏ.பி. 2.25 லட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 4.60 லட்சம் மெட்ரிக் டன் மற்றும் உரவகைகள் 5.90 லட்சம் மெட்ரிக் டன் தேவைப்படுகிறது. இந்த ஆண்டு காரிப் பயிர் சாகுபடிக்கு என மத்திய அரசு, யூரியா 3 லட்சம் மெட்ரிக் டன், டி.ஏ.பி. 1 லட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 1.50 லட்சம் மெட்ரிக் டன், மற்றும் உரவகைகள் 2 லட்சம் மெட்ரிக் டன் ஒதுக்கீடு செய்துள்ளது. காரிப் பருவத்தில் இதுநாள் வரை யூரியா 1.68 லட்சம் மெட்ரிக் டன், டி.ஏ.பி. 0.47 லட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 0.72 லட்சம்

மெட்ரிக் டன் மற்றும் உரவகைகள் 0.78 லட்சம் மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் பெறப்பட்டுள்ளது. தற்சமயம் யூரியா 0.96 லட்சம் மெட்ரிக் டன், டி.ஏ.பி. 0.51 லட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 0.49 லட்சம் மெட்ரிக் டன், மற்றும் உரவகைகள் 1.09 லட்சம் மெட்ரிக் டன், இராசாயன உரங்கள் இருப்பில் உள்ளது. டெல்டா மாவட்டங்களில் மட்டும் யூரியா 3.0 லட்சம் மெட்ரிக் டன், டி.ஏ.பி. 0.17 லட்சம் மெட்ரிக் டன், பொட்டாஷ் 0.13 லட்சம் மெட்ரிக் டன் மற்றும் உரவகைகள் 0.32 லட்சம் மெட்ரிக் டன் இரசாயன உரங்கள் இருப்பில் உள்ளது. சம்பா பயிர் சாகுபடி மற்றும் இதர காரிப் பருவ பயிர்கள் சாகுபடிக்குத் தேவையான இரசாயன உரங்கள் இருப்பில் உள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும், மத்திய அரசு உரங்கள் துறை இணைச் செயலாளர் அவர்கள் நடத்திய வாராந்திர காணொலி காட்சியில், தமிழ்நாட்டிற்கு மேலும் கூடுதலாக யூரியா, டி.ஏ.பி. பொட்டாஷ் மற்றும் உரங்களை ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்துள்ளார்கள் என்பதையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

டெல்டா பாசன விவசாயிகளுக்குத் தேவையான நீர் இன்றைய தினத்திலிருந்து திறக்கப்படுகின்றது. படிப்படியாக நீரின் அளவை அதிகரித்து, விவசாயிகளுக்கு பாசனத்திற்கு எவ்வளவு நீர் தேவைப்படுகிறதோ அந்தளவிற்கு முழுமையாக கடைக்கோடியிலிருக்கின்ற விவசாயிகளுக்குக்கூட பாசனத்திற்கு தண்ணீர் கிடைப்பதற்கு அம்மாவினுடைய அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, காவிரிப் படுகையில் இருக்கின்ற கிழக்குக் கரை , மேற்குக் கரை பாசன விவசாயிகளுக்கும் குறித்த காலத்திலே தண்ணீர் திறந்துவிடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் இந்தத் தருணத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

சட்டப் போராட்டங்களுக்குப் பிறகு காவிரி மேலாண்மை ஆணையம் அமைத்ததற்கு வெற்றியினை நினைவுகூறும்வகையில், மேட்டூர் அணை பூங்கா பகுதியில் நினைவு ஸ்தூபி

அமைத்தல் மற்றும் மேட்டூர் அணைப் பூங்காவை மேம்பாடு செய்வதற்கான மதிப்பீடான ரூபாய் 2 கோடி ஒதுக்கீடு செய்யப்படும். மேட்டூர் அணை பூங்கா பகுதியில் நினைவு ஸ்தூபி அமைப்பதற்காக ரூபாய் 1.25 கோடியும், மேட்டூர் அணைப் பூங்காவை மேம்பாடு செய்வதற்காக 75 லட்சம், ஆகமொத்தம் ரூபாய் 2 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேட்டூர் அணை கட்டப்பட்டு சுமார் 83 ஆண்டு காலம் ஆகிறது. இந்த 83 ஆண்டு காலத்திலே மேட்டூர் அணை தூர்வாராமல் இருந்தது. இந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களும், டெல்டா பாசன விவசாயப் பெருங்குடி மக்களும் நீண்டகாலமாக இருக்கின்ற மேட்டூர் அணையிலே வண்டல் மண் படிந்து அதனுடைய நீரின் கொள்ளளவு குறைந்திருக்கிறது. ஆகவே, வண்டல் மண்ணை விவசாயிகள் இலவசமாக எடுத்துக்கொள்வதற்கு நீங்கள் துணைபுரிய வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வைத்தார்கள். அந்த விவசாயப் பெருங்குடி மக்களின் கோரிக்கையை ஏற்று, அம்மாவின் அரசு மேட்டூர் அணையிலிருந்து வண்டல் மண் இலவசமாக எடுத்துக் கொள்வதற்கு ஆணையிட்டு, நாள்தோறும் 3000 லாரியில் மேட்டூர் அணையிலிருந்து வண்டல்மண் எடுக்கப்பட்டு விவசாயிகளுடைய நிலங்களுக்கு இயற்கை உரமாக பயன்படுத்தினார்கள். மேட்டூர் அணையைச் சுற்றிலும் 60 கிலோமீட்டர் சுற்றிலும் உள்ள விவசாயிகள் இந்த வண்டல் மண்ணை அள்ளி, அவர்களுடைய நிலத்திற்கு இயற்கை உரமாக பயன்படுத்தினார்கள். அந்த விவசாயிகளெல்லாம் என்னிடத்திலே தெரிவித்தார்கள், நீங்கள் ஒரு வரலாற்று சிறப்புமிக்க திட்டத்தை அறிவித்தீர்கள். நீண்ட காலமாக நாங்கள் விவசாய நிலத்திற்கு ரசாயன உரத்தைத்தான் வைத்துத்தான் நிலங்களில் பயிர் செய்தோம். இப்பொழுது வண்டல் மண்ணை இயற்கை உரமாக பயன்படுத்தியதன் விளைவாக கூடுதலான விளைச்சலை நாங்கள் பெற்றிருக்கின்றோம் என்று தெரிவித்தார்கள். ஒருபுறம் வண்டல்மண் அள்ளுவதால், அணை தூர்வாரப்படுகிறது, ஆழமாகிறது. இன்னொருபுறம் விவசாயிகள் தங்கள்நிலத்திற்கு இயற்கை

உரமாக பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட உன்னதமான திட்டத்தை அம்மாவின் அரசு அறிவித்து, அந்தத் திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் மேட்டூர் அணையில் தண்ணீர் வடிந்த பிறகு, அந்த அணைப் பகுதியில் இருக்கின்ற வண்டல்மண்ணை விவசாயிகள் இலவசமாக அள்ளிக்கொள்ளலாம் என்று அரசு அறிவிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு விவசாயிகளுடைய அரசு, விவசாயிகளுக்காக பல்வேறு திட்டங்களை அளிக்கின்ற அரசு. ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 12 ஆம் தேதி, டெல்டா பாசனத்தில் இருக்கின்ற குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறந்து விடுவோம். ஆனால் ஜுன் 12–ஆம் தேதி போதிய நீர் அணையிலே இல்லாத காரணத்தால், குறுவை சாகுபடிக்கு உரியநேரத்தில் தண்ணீர் திறக்கமுடியவில்லை. இருந்தாலும், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலே, டெல்டா பாசனத்தில் இருக்கின்ற விவசாயிகள் குறுவைசாகுபடி செய்யவேண்டும், அப்படி செய்யாமல் போனால் அந்த விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்று கருதி, குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். அந்த வழியிலே வந்த அம்மாவினுடைய அரசும் குறிப்பிட்ட காலத்திலே மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்காக தண்ணீர் திறக்கமுடியாத ஒரு சூழ்நிலை இருந்தபொழுது, மூத்த அமைச்சர்களோடு கலந்து பேசி, இன்றைக்கு டெல்டா பாசன விவசாயிகளுக்கு, அங்கே இருக்கின்ற நிலத்தடி நீரை பயன்படுத்தி, குறுவை சாகுபடி செய்யலாம் என்ற ஒரு அறிவிப்பை கொடுத்து அதற்குத் தேவையான உதவிகளையும் செய்வதற்காக, குறுவை சாகுபடி தொகுப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, அதற்காக ரூபாய் 115 கோடி அம்மாவினுடைய அரசு விவசாயிகளிக்கு அளித்து விவசாயிகளை ஊக்கப்படுத்தி, விவசாயிகள் குறுவை சாகுபடி திட்டத்தை மேற்கொண்டிருக்கின்றார்கள். ஆகவே தண்ணீர் இல்லாவிட்டாலும்கூட, இருக்கின்ற நிலத்தடி

நீரை வைத்து விவசாயிகள் அந்த பயிரை நடவு செய்ய வேண்டுமென்ற ஒரு நோக்கத்தில், இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் முழுவதும் பார்த்தால், என்றைக்கும் இல்லாத ஒரு வரலாற்று சாதனை இன்றைக்கு. இன்றைக்கு, அருகிலே இருக்கின்ற பவானி சாகர் அணைக்கு கிட்டத்தட்ட 24 டிஎம்சி தண்ணீர் வந்துவிட்டது, கடந்தகாலம் வெறும் 3 டிஎம்சி தண்ணீர்தான் இந்த காலக்கட்டத்தில் இருந்தது. அமராவதி அணை நிரம்பிவிட்டது. முல்லை பெரியாறு அணை நிரம்பிக் கொண்டிருக்கிறது. கோயம்புத்தூரில் இருக்கின்ற சிறுவாணி அணை நிரம்பி வழிந்து கொண்டிருக்கிறது. சிறுவாணியில் இருந்துதான் கோவை மாநகர மக்களுக்கு தேவையான குடிநீர் விநியோகம் செய்யமுடியும். அது வறண்டு இருந்த காரணத்தால் கடுமையான குடிநீர் பிரச்சினை ஏற்பட்டு இருந்தது. இன்றைய காலகட்டத்தில், எல்லாம் வல்ல இறைவனுடைய அருளால், இன்றைக்கு அந்த அணை நிரம்பி வழிகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். அதுமட்டுமல்ல, பெரும்பாலான அணைகள், பரம்பிக்குளம், ஆழியாறு, மணிமுத்தாறு, பாபநாசம் என பல்வேறு மாவட்டங்களில் இருக்கின்ற அணைகள் எல்லாம் இன்றைக்கு நல்ல பருவமழை பெய்ததன் காரணமாக அந்த அணைகளுடைய நீர்மட்டம் உயர்ந்து கொண்டிருக்கிறது. எல்லா அணைகளிலிருந்தும் குறித்த காலத்தில் விவசாய பெருங்குடி மக்களுக்கு பாசன வசதிக்காக, விவசாயம் செய்வதற்காக தண்ணீர் திறக்கப்படும் என்ற செய்தியை இந்த தருணத்தில் தெரிவித்து, இன்றைக்கு அம்மாவினுடைய அரசுதான் மக்களுக்குத் தேவையான திட்டங்களை அளிக்கின்ற அரசு என்பதை மீண்டும், மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்களெல்லாம், எதிர்க் கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் போராட்டம் நடத்தினார்கள். சரியாக உச்சநீதிமன்றத்திலே வாதாடவில்லை, ஆகவே நமக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கவில்லையென்ற தவறான, அவதூறான கருத்தையெல்லாம் தமிழகத்திலே பரப்பி

வந்தார்கள். பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.அவர்களும், புரட்சித்தலைவி அம்மா அவர்களும், இந்த இரண்டு தலைவர்களும் என்ன நடவடிக்கையை மேற்கொண்டார்களோ, அதே நடவடிக்கையை அம்மாவினுடைய அரசும் மேற்கொண்டு சட்டப்போராட்டத்தின் மூலமாக விவசாய பெருங்குடி மக்களுக்கு நிலையான தீர்ப்பை பெற்றுத் தந்திருக்கின்றோம். ஆகவே, இன்றைக்கு அவர்களெல்லாம் எதுவும் பேசமுடியாத அளவிற்கு, நல்ல மழைபொழிந்து, அணைகளெல்லாம் நிரம்பிக் கொண்டிருக்கின்றது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் ஏற்கனவே ஒரு அறிவிப்பை சட்டமன்றத்திலே அறிவித்திருந்தேன். தேசிய தலைவர்களில் ஒருவரும், தமிழக மக்கள் நலனுக்காக பாடுபட்டவரும், பின்தங்கிய மக்களின் வாழ்க்கை முன்னேற வேண்டும் என்பதற்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டு வாழ்ந்த முன்னாள் அமைச்சர் மதிப்பிற்கும், மரியாதைக்குமுரிய மறைந்த ராமசாமி படையாச்சியார் அவர்களுடைய பிறந்த நாளை அரசு விழாவாக கொண்டாடப்படும் என்ற அறிவிப்பை தந்தேன். அதைத் தொடர்ந்து, என்னை என்னுடைய அறையில், தலைமைச் செயலகத்தில் சந்தித்து மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மரியாதைக்குரிய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு.சி.வி.சண்முகம் அவர்களும், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி.அன்பழகன் அவர்களும், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.எம்.சி.சம்பத் அவர்களும், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.துரைக்கண்ணு அவர்களும், மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் திரு.கே.சி.வீரமணி அவர்களும், அந்த சமூகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், அந்த சமூகத்தைச் சேர்ந்த சான்றோர் பெருமக்கள், அந்த சமூகத்தைச் சேர்ந்த பல நல்ல உள்ளம் கொண்டவர்களெல்லாம் என்னை அணுகி, அவருடைய பெருமையும், புகழும் சேர்க்கின்ற விதமாக, அவர் பிறந்த கடலூர் மாவட்டத்தில் ஒரு மணிமண்டபமும், அவருக்கு வெண்கல முழு திருவுருவச்சிலை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இந்த நல்ல மேடையிலே, நல்ல நாளிலே அப்படி சிறப்புமிக்க, புகழ்மிக்க மக்களுக்காக வாழ்ந்து மறைந்த

ஒப்பற்ற தலைவர் ராமசாமி படையாச்சியார் அவர்களுடைய நினைவாக, பெருமையை போற்றுகின்ற விதமாக, அவர் புகழுக்கு பெருமை சேர்க்கின்றவிதமாக, அவர் பிறந்த கடலூர் மாவட்டத்தில் ராமசாமி படையாச்சியார் அவர்களுக்கு நினைவுமண்டபம் அரசின் சார்பாக கட்டப்படும் என்று தெரிவித்து, அந்த நினைவு மண்டபத்திலே அவருக்கு முழுஉருவ வெண்கலச் சிலையும் அமைக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்து, அவரைப் போல இருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை, எதிர்வருகின்ற இளைஞர்கள் தெரிந்து கொள்வதற்காக இப்படிப்பட்ட நல்ல நிகழ்வை அம்மாவினுடைய அரசு எடுத்திருக்கிறது என்பதை சுட்டிக்காட்டி, இந்த நிகழ்வுக்கு வருகை தந்துள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், வருகை தந்திருக்கின்ற விவசாய சங்கத்தைச் சார்ந்த தலைவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், விவசாய பெருங்குடி மக்களுக்கும், பொதுமக்களுக்கும், கழகத்தின் பல்வேறு மட்டத்தில் இருக்கின்ற நிர்வாகிகளுக்கும், ஊடக நண்பர்களுக்கும், பத்திரிகை நண்பர்களுக்கும் மனமாற, உளமாற நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி,

வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**